146

மூன்றாம் பாகம்

காங்கிரஸ் தொண்டர் மரியல்பாட்டு

V.R. ஏழுமலைப் பிள்ளை

189. வால்டாக்ஸ்ரோடு
சௌகார்பேட்டை
மதராஸ்.

O-,1MMS5,K
1432.3.
170927

உ

பாரதமாதாதுணை.

K. V. மீனுக்ஷிசுந்தரம் செட்டியாரவர்கள் இயற்றிய

காங்கிரஸ் தொண்டர்கள்

மறியல்பாட்டு.

(மூன்றும் பாகம்,)

விநாயகர் வணக்கம்.

வெண்பா.

பார்புகழும் தேசபக்தர் பண்ணிடும் மறியல் தன்னை
பேர்பெருகும் செந்தமிழாற் பேசுதற்கே—கார் நிறையும்
செல்வக்கணபதி சேவித்தேன் நின்னடியை
சொல்லுந் தமிழ்க்கருள் செய்.

குதம்பைசித்தர் பாடல் (மெட்டு)

எப்போதுமுன்னையே யிறங்கிதுதிப்போர்க்கு
தப்பாதருள் தருவாயே கணேசா
தப்பாதருள் தருவாயே

பாரததேவியீன்ற பாலர்செய் மறியல்தனை
பாடவருள் செய்குவாயே கணேசா
பாடவருள் செய்குவாயே

செந்தமிழ் கவிமீனுக்ஷி சுந்தர முனைத்துதித்தேன்
சந்ததம் எனைக்காருமே கணேசா
சந்ததம் எனைக்காருமே

சரஸ்வதி தேவி துதி.

அப்பனே நீயே கதி (மெட்டு)

பல்லவி.

வாணியே நீயே கதியே எனை
வந்தாள் ததியே (வா)

அநுபல்லவி.

வந்தெனையாண்டு வரமருள்ராணி
உந்தனை போற்றினேன் வுற்றமெய்ஞானி
சந்ததமுந்தனை சிந்தயிற் போற்றினேன் கோ
விந்தன்சோதரி வந்தருள் கிருபாகரி (வா)

பாரததேவி வணக்கம்.

இதந்தரு மனையினீங்கி
இடர் மிகுசிறைப்பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுந் திழிவுற்றாலும்
விதந்தரு கோடியின்னல்
விளைந்தெனை யழித்திட்டாலும்
சுதந்திர தேவி! நின்னை
தொழுதிடல் மறக்கிலேனே.

-600 005.
2077
784.0954

மகாத்மா காந்திஜியின் வணக்கம்.

கந்தா காருண்யனே (மெட்டு)

பல்லவி.

காந்திமாமுனியே கருணாநிதியே (கா)

அநுபல்லவி.

வந்தாளித்து ததியே   வுயா ...

சரணம்.

ஆதியில் சுதேசிதன்னை   ஆக்கினய்
துயர்   போக்கினய்
நீதியமைந்தவா   நின்னையே போற்றினேன்
ஜாதிபேதந்தன்னை   சங்கரித்த மஹான்

தொகையறா.

பஞ்சமா பாதகமென்றே கட்குடியை
பாழாக்க வந்த சீலர்
கஞ்சா வபின் ஒபின் கழநும் பிராந்தி தனை
கண்டனம் செய்சுசீலர்
வஞ்ச மின்றி தேசிபம் வாழவே கருணை செய்
வண்மை மிகு சுசீலர்
தஞ்சமென் போரை தக்ஷணமே யருளீந்து
தாவியே கார்க்கும் சீலர்

பாட்டு.

சுந்தர கவியாளா   செந்தமிழ் மீனைகூ
சுந்தரம் பணிதாளா   வந்தேமாதர வொளி (கா)

தணிகைமேவும் கந்தசாமி (மெட்டு)

பல்லவி.

குடியிலழிந்தவர்கள்   கோடி இந்த
குவலயந்தனிற் கூடி   கட்   (குடி)

அநுபல்லவி.

மதியை மயக்குங் கட்குடியே
மானிடர்கிதுவென்ன விதியே
பாவமே தரு மாதலாலே
பருகவேண்டா மினிமேலே (குடி)

சரணங்கள்.

கள்ளதையே குடியாதீர்
கஷ்டப்மிக தரு மறிவீர்
எள்ளளவும் பிழையில்லை
எப்படியும் குடியால் தொல்லை
உத்தமரே சத்தியமே
ஆவலேனோ பாவந்தானே
ஐயையோ புவியில் (குடி)

தொகையரு.

இந்தியாவிலிருந்து கள்சாராயந்தனை கப்பலில்
ஏற்றுவரோ அந்நிய வெள்ளையர்
இந்தியா மட்டுமே ஏனந்நியப் பொருளை
இறக்குமதி செய்தல் வேண்டும்
இந்திய மக்களுக்கின்ன முறைப்பதேன்
இனியாகிலும் விழிப்பீர்கள்
இந்திய மக்களே! ஏன் பருகல் வேண்டுமையோ
இழிவான கள்ளதையே.

பாட்டு.

இப்போ விட்டிடுவீர் கவி
செப்பிடு மீனாக்ஷிசுந்தரம் சொற்படி (கு)

கதராடைச் சிறப்பு.

ஆண்டிபண்டாரம் (மெட்டு)

பல்லவி.

சுதேசிதுணி—வாங்கி
சுகமுடனணி

அநுபல்லவி.

கஷ்டமதைபோக்கி கருணைகொடுக்குமுயர்
இஷ்டர்களே நீரும் இப்பொழுதே சென்று (சு)

பரதகண்டமதில் யல்லோரும் போற்றுங்கதர்
நிரந்தர மானகாந்தி நீனிலத்திற் தந்தகதர் (சு)

அந்நிய நாட்டுடைமேற் அன்புகொண்டேன் பதரே
நன்னயமுடன் கதரை நாமணிந்திடில் புகழே (சு)

அழுத்தமான வேஷ்டி அன்பரே வேணதுண்டு
கழித்திடுவீர் விதேசி துணியை மனங்கொண்டு (சு)

கருத்துக்கிசைந்த கதர் காசினி புகழுங் கதர்
பொருத்தமுடன் காந்தி போதித்த வுண்மை கதர் (சு)

கருப்பு மஞ்சள் சிகப்பு கலரநேகமுண்டு
விருப்பமுடனே நாமும் வேண்டியணிந்தோம் பண்டு (சு)

பெண்மக்களுக்கேற்ற புடவையநேக முண்டு
கண்ய முடனணிந்தால் காசினியிற் புகழுமுண்டு (சு)

துவைப்பதற்கு சுலுவு காசும் விலை மலிவு
தூரதேசவுடையை விட சொல்லும்கதரே வுயர்வு (சு)

சமுக்காளம் போர்வையெலாம் சரசமுடன் கிடைக்கும்
சத்திய கதருடையால் சவுக்கியமே பெருகும் (சு)

உத்தம ரணியுங்கதர் ஊரெலாம் புகழுங்கதர்
சத்தியமானகதர் தரணியிற் புகழுங்கதர் (சு)

செந்தமிழ் மீனாக்ஷி சுந்தரமணியுங் கதர்
சந்ததம் நாமும் சார்ந்து கதரணிவோம் (சு)

பாரினிலே புகழ் (மெட்டு)

கள்ளைக் குடிப்பது மாபெரு பாதகமே
கேளு நற் போதமே
கள்ளைக் குடிப்பதால் தொல்லைகள் வந்திடும்
வெள்ளை மதுபான சள்ளையை விட்டிடும்

தொகையரு.

தந்தை தாய் தமக்கையுடன் தாம் பெற்ற
தனயரையும் மறக்கச்செய்யும்
நிந்தையே யென்னளும் நிஷ்டூரமாகும் வெகு
நீச்சமே கட்குடியே
சிந்தையிற் பொய்சூது செய்திட தூண்டிடும்
சீரற்ற கட்குடியே
சந்ததம் பஞ்சமா பாதகம் செய தூண்டும்
சண்டாளக் கட்குடியே.

கண்ணிகள் தொடர்.

இத்தனை குற்றங்களிழைக்கு மிக்குடியை நீரும்
இழப்பீரிப்படியே
சுத்த மனதையும் தூறுகள் செய்திடும்
உத்தமரே கள்ளை உன்பதநிராயம்

தொகையரு.

அய்யய்யோ ! குடியினாலழிந்தவர்கள் கோடியே
அறைவதனில் கடினமே
அன்பரே குடியினை யகற்றியே நிலமிசை
அன்புடன் வாழ்தல் வேண்டி
நன்மனதாகவே நாமும் மதுவிலக்கு
நாடியே புரிதல் வேண்டும்

கண்ணிகள் தொடர்.

களைா யொழிப்பதாற் காணும் சுதந்திரமே தமிழ்
கவியின் தந்திரமே
செந்தமிழ் மீனாக்ஷி சுந்தரம் சொல்வாக்கு
செப்பினே னுலகில் தப்பிதம் பொருப்பீர்

பாமா கதவை திறப்பாய் (மெட்டு)

பல்லவி.

காந்தி கதரணிவீரே அன்பான வுயர் (காந்)

அநுபல்லவி.

காந்தி கதரணிந்தால் சாந்தியுண்டிந்தியர்க்கு (காந்)

சரணங்கள்.

காந்தி கருடை கட்டிடில் கண்யமே
சாந்தி கூறுமினி ஜெனித்ததும் புண்யமே
நண்பர்களே சொன்னேன் (காந்)

சுதந்திரம் பெற்றிட யிதுவொரு தந்திரம்
விதவித மாக விளங்குங்கதர் நிறம்
இத்தினமே நீங்கள்
சத்தியமான வுயர்

தொகையரு.

கதரணிந்திடிற் கஷ்ட மனுகாது
காசினியிற் புகழுமுண்டு
விதமுறுநிறம் பல வேனதுண்டு
வேண்டியதை யணிகுவீரே
நிதமுமே செந்தமிழ் மீனாக்ஷிசுந்தரம்
நேர்மையுடனணிதல் கதரே
பதமுடன் காந்திசொல் பக்குவமறிந்து
பண்புடன் வாழ்வீர்மாதோ.

வா வா கார்த்திகா (மெட்டு)

பல்லவி.

வேண் டாம் கட்குடி பெரு
நிதியை யழித்து நறு
மதியை குறைக்கு மய்யோ!

அநுபல்லவி.

வேண்டாம் கட்குடி ஆண்டவன் தருமதி
தாண்டிவிடு மறி
விட்டுவிட்டால் மதி கிட்டிவாராதறி

தொகையரு.

சைப்பொருளை யழித்துக் கருத்தையு மழிக்குமிந்த
கள்ளெனும் பேயே
எப்படியு மிழிவை யீந்து கெடுத்திடும்
இந்தகட்குடி பேயே
முந்திடயுரைத்ததை மீளவும் பண்முறை
மூர்க்கமாய் பேசுங்குடியே

170141
...னை-600...

செந்தமிழ் மீனாக்ஷிசுந்தரம் வெளுத்துரைக்கும்
சதியான கட்குடியே

சுருளிமலை மீதுமேவும் (மெட்டு)

காந்திமுனி தந்த கத ருடையே அதை
ஏந்தி பூட்டுமுந்த னிடையே அது
காண்டிபப்போற்பிணியை தாண்டிடசெய்யுமதை
பாரு என்ன சீறு

அந்திய நாட்டுடையே வேண்டாம் அதை
அணிந்தால் ஹான்மிக வுண்டாம் இந்த
அவனியிலிந்தியர்கள் பதமுட நூற்குங்கத
ருடையே பூட்டு மிடையே

பெண்களுக் கேற்றசேலை யுண்டு அதன்
பெறுமைதனை மனதிற் கொண்டு நிதம்
பேசுங்கதருடைதனை வாசமுடனணிவோம்
தானே சீ மானே

நாரிமணிகளாலிழைத்த நூலே அதை
நாடியே யணிவோ மிந்தக் காலே அதன்
நாணயமதையுரைக்க நீணிலந்தனிலெவரா
லாகும் துயர் போகும்

இந்திய மக்களால் செய்த உடையே அது
இருக்கம் தாங்கு மிக உடையே அதை

இந்தியா ரனைவருமே சொந்த முடனணிதல்
வேண்டும் துயர் தாண்டும்

கைத்தரியில் நூற்றவுயர் கதரே இதை
கண்யமுட னணியாதவர் பதரே என்று
கழறினர் காந்திமுனி இதமுடனணிவீர் கதர்
தானே சீ மானே

தூயமனமுடனம்மை காக்கும் பொல்லா
துஷ்டதனத்தை முன்னே போக்கும் அந்த
தூயமனகாந்திகதர் நேயமுடனனிய
வேணும் பலன் காணும்

பெண்தொண்டர் செய்திட்ட சேலை அதை
பிரியமுடன் கொள்ளுமிக் காலே அது
பேதமைதனை யழித்துநற் போதமதை யுணர்த்தும்
அய்யே இது மெய்யே

காளையர்கள் நெய்தவுயர் துண்டு அதை
கண்யமுடனனிந்தோம் பண்டு இதை
கருதியிந்தியமக்கள் கருணையுடனனிய
வேணும் பலன் தோணும்

வீட்டிற்கொரு ராட்டை வைத்து சுற்றும் புகழ்
நாட்டியே நம்மை காக்கும் முற்றும் இந்தியா
நாட்டிலுள்ளோர் செழிக்க ஆட்டுவீர் ராட்டதனை
வைத்தும் தினம் சுற்றும்

மேதினி புகழும் கொரக் கோட்டை கவி
மீனாக்ஷிசுந்தரம் தமிழ் பாட்டை நிதம்
மேன்மையுடன்பாடி வோட்டுவீர்ராட்டுதனை
தானே சீ மானே

கதர் கப்பல் கொடி (மெட்டு)

பல்லவி.

கதருடை யணிய வேணுமே
காந்தி மோகன தாஸருரை சுதேசியக் (கத)

அநுபல்லவி.

ஆதியிலே இந்தியர்
அணிந்தது இதுபார்
ஆ! ஹா! என்ன ஜோர்
ஆனந்த மாகுது பார் (கத)

சரணங்கள்.

அந்நியவுடைகளாலே யழிந்தது நமதுபொருள்
அன்பான கதரைதொட்டு அந்நியவுடையைவிட்டு
எடுப்பீர் கதர்
உடுப்பீர்
வந்தே மாதரஞ் ஜெபிப்பீர் (கத)

கதருடைய யணி காந்தியினடி பணி
இதமுட னிந்தியர்கள் யின்னலின்றி வாழவேண்டும்
அதுதானே சரி
கவிமீனாக்ஷி சுந்தரமணி (கத)

K V. மீனாக்ஷிசுந்தரம் செட்டியார் மாணவர்,

A. V. மோஹனசுந்தரம் பாடியது.

கோறுங்கள் கோறுங்கள் (மெட்டு)

பல்லவி.

வாருங்கள் வாருங்கள் வாருங்களே-களி
கூறுங்கள் கூறுங்கள் கூறுங்களே (வா)

அநுபல்லவி.

பாரதிதுய ரொழிக்க
பாரிலுள்ளோர் செழிக்க (வா)

சரணங்கள்.

அந்நியராடையை அறவேயொழித்து
ஐயையோசூது கட் குடியை கழித்து
தேருவதென்றுளென் கொள்ளுவீர் கருத்து
பார்மகளின் துயரொழிக்க
பார்மிசையி னனைவருமே (வா)

பாவபுண்ணிய மென்னுணராது
வஞ்சமாபாதகம் செய்தால்புவிமீது
பகரும்பாசம் நம்மைவிடாது
ஆதலாலே ஓதினேன்கேள்
பாதகத்தையே யொழித்து (வா)

மாணிலத்திில்வந்த மகரிஷிகாந்தி
மக்களுக்குழைத்தார் கைராட்டைஏந்தி
மாணிலத்திலவ ரோர் வேதாந்தி கை
ராட்டினத்தால் நூலை நூற்று
நாட்டிலுளோர் ஆடைகொள்வீர் (வா)

செந்தமிழ் மீனாக்ஷி சுந்தரம் சீடன்
செப்பினேன் மோஹண சுந்தரம் தானே
செப்பிடுங் கீதத்தில் தப்பிதமானாலும்
பெரியவரே சிறுவனுரை
பிழை பொருப்பீர் கருணையுடன் (வா)

சுதேச மறியல் பாட்டு
மூன்றும் பாகம்.
முற்றிற்று.

இதன் தொடர்ச்சி நான்காம் பாகம்
அவசியம் பார்க்கவும்.

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ் சென்னை,

சீதபேதி (டிசென்டரி) பவுடர்.

இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமுங் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக்கடுப்பு அடிவயிற்றுநோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரையில் யாவரும் சாப்பிடலாம் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் கண்டிக்கும.

ஒரு புட்டியின் விலை அணு 8.

கர்ண பிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளா திருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும். புட்டி 1-க்கு அணு 4. வி. பி தபாற்கூலி பிரத்தியேகம்.

சர்வபடை சம்மாரன்,

சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணு 4.

ஓட்டோ லீலா.

எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தை தந்து இதற்கு நிகரான சுகந்தமான சென்ட் வேறொன்று மில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யும் இதில் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவியத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக் கொண்டால் சிறந்த பலபுஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.

கிரயம் புட்டி 1-க்கு அணு 10. ஷை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோம முள்ள விடத்தில் பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும். வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அண 8.

அயத்தங்கத் திராவகம்,

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேயமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிகஇன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்யமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

இது. நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்திலாவது, பழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும் இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிகதலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாயவு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதை விட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20.நாள் மருந்து ரூ. 1. 40-நாள் மருந்து ரூபா 1-12-0.

சிவப்பிரகாச பல்பொடி.

இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாசவும் பல் வலி, பல்லில் சொத்தை, ஈறு வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கும். ஒருமாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் அணா 10.

நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒருவருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்து விடும்.

8-பில்லைகள் விலை அணா 6.

சர்வதேள் விஷ நிவாரணி சஞ்சீவி.

நண்பர்களேஒவ்வொருவர் வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொருக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும்பார்த்து விசனமுற நேருவதைப் பற்றியாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்து இருக்கிறோம். தேள், நட்டுவாக்காலி கொட்டியவுடனே இந்த மருந்தை போட்டால் 1, 2, நிமிஷங்களில் கட்டாயம் விஷம் நீங்கும்.

உபயோகிக்கும் விவரம் மருந்தோடு அனுப்பப்படும்.

இதன் விலை பாக்கெட் அணா 8.

ஜெர்மனி எய்கோ அத்தர்.

இவை சாதாரண சுதேச அத்தர்களைவிட ஆயிரம்பங்கு மேலானது வேறு ஆங்கில வாசனைகளைப் போல் சாராயசத்து ஆல்கோஹால் சேர்த்துச் செய்யப்பட்டதல்லசெவ்வையாய்மலர்ந்த புட்பங்களின் வாசனையை ரசாயன சாஸ்திர முறையால் இறக்கப்பட்டது அழகும் உறுதியுள்ள கேசில்வைத்து பாக்செய்யப்பட்டது இதில் ஒரு துளி பூசினால்போதும்.

1-டிராம் புட்டி 1-விலை ரூபா	1	0	0
அரைடிராம் புட்டி அணா	0	12	0

எமது விலாசம்:—V. R. ஏழுமலைப் பிள்ளை,
189, [illegible], சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்

ஏமாறவேண்டாம்! இனி ஏமாறவேண்டாம்!!

ஏன்?

வி. ஆர். ஏழுமலைப்பிள்ளையவர்களால் பதிப்பித்தது.
உண்மையான விஷயங்களுடன் பழையக்கொக்கோகம்
வெளிவந்து விட்டபடியால், இனி ஏமாறவேண்டாம்!

அமுர்தநிலை சக்கரங்கூடிய

பழைய

கொக்கோகம்.

இவ்வுறிய நூலின்கண் சதிபதிகளின் அவயலக்ஷணங்களும் மர்ம ஸ்தானங்களின் அமைப்பும் காமவுற்பவம் சம்போகத்தின் விளக்கம் ம்ாதவிடாயின் தத்துவம் இன்ப காலஅு.தில் நிகழுவதென்ன? இன்ப மனுபவிக்கும்முறை சம்போகக் கிரமம் மர்ம ஸ்தானங்களின் பேதாபேதம் மாதர்களுக்கு அமிர்தமிருக்குமிடமும் ஸ்தானத்திற்குறிய தொழில் கலவியில் கொக்கோக லீலை ஆண்மலடும், பரிகாரமும், பெண்மலடும் பரிகாரமும் மனம்போல் மக்களைப்பெரும் பாக்யம், ஸ்திரிகள் புருஷர்களை வலியப்படுத்தும்முறையும் புருஷர்கள்பெண்களை வலியப்படுத்தும் முறையும் பள்ளியறையின் செய்கை, இது போல் இன்னும் நூற்றுக்கணக்கான விஷயங்கள் அடங்கியிருக்கிறது. இந்நூலை வாலிபர் முதல் வயோதிகர் வரையில் ஆண் பெண் இருபாலரும் அவஸியம் வாங்கி வாசிக்கவேண்டியது சுமார் 5 வருடகாலமாக வெகு கஷ்டப்பட்டு தயார் செய்யப்பட்டது சொற்ப காபிகளே கையிலிருப்பதால் முந்தின வருக்குத்தான் புஸ்தகம். 64 கொக்கோக லீலா விநோத ரகசியப் படங்களுடன் சொற்ப விலை ரூ. 2 0 0

நீங்கள் சதா சிறிப்பையும் சந்தோஷத்தையும்
அடைய வேண்டுமானல்?

அண்டப்புளுகனை அதட்டி, ஆகாயப்புளுகனை மிரட்டி, திடீர்புளுகனை துரத்தி, ஜண்டப்புளுகன் வண்டிப்புளுகன் மதரூஸ் புளுகன், முதலிய பிரபல புளுகர்களை ஜெயித்து புளுகர்களுக்கு அரசனாக விளங்கிய நிமிஷப்புளுகனை வென்ற,

நிஜப்புளுகன.

என்னும் புத்தகத்தை உடனே வாங்கி வாசியுங்கள்.

இதன் விலை அணா, 0—6—0.

எமது விலாசம்:— [illegible] ஆண்டு கம்பெனி,
வால்டாக்ஸ் ரோட், சௌகார்பேட்டை போஸ்டு மதராஸ்.